**+1 வணிகவியல் ஆண்டு இறுதித் தேர்வு மே -2022**

**சரியான விடை 20X1=20**

| A Type | B Type |
|---|---|
| 1. (இ) தனியாள் வணிகம் | (இ)சுற்றாடும் வியாபாரிகள் |
| 2. (ஈ) உரிமையாளர்கள் | (அ) நிறுமசெயல்முறை விதிகளின் மாதிரி |
| 3. (அ) 3 | (ஈ)தனியார் பண்டகசாலை |
| 4. (இ) உற்பத்தித் தொழில் | (ஆ) பன்னாட்டு வியாபாரம் |
| 5. (ஈ) சட்டத்தால் நடைமுறை படுத்த முடியாத உடன்பாடு | (ஈ) இரண்டு |
| 6. (இ) சம்பளம் / கூலி | (ஆ) ஒப்பந்தத்தால் |
| 7. (ஈ) 1872 | (ஈ) சட்டத்தால் நடைமுறைப்படுத்த முடியாத உடன்பாடு |
| 8. (ஆ) ராபர்ட் ஓவென் | (இ) மொத்த வியாபாரிக்கும் சில்லரை வியாபாரிக்கும் இடையேயான வியாபாரம் W2R |
| 9. (ஈ) அத்தியாவசிய பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது | (ஈ) முழுவதும் வரிவிலக்கிற்கு உட்பட்டது |
| 10. (அ) நிறுமசெயல்முறை விதிகளின் மாதிரி | (ஈ) கூட்டுறவு |
| 11. (ஈ) இரண்டு | (அ) Goods and Service Tax |
| 12. (ஆ) பன்னாட்டு வியாபாரம் | (ஈ) அத்தியாவசிய பொருட்களையும் சேவைகளையும் சிக்கன விலையில் வழங்குவது |
| 13. (ஈ) கூட்டுறவு | (இ) உற்பத்தித் தொழில் |
| 14. (ஈ) முழுவதும் வரிவிலக்கிற்கு உட்பட்டது | (ஈ) 1872 |
| 15. (இ)சுற்றாடும் வியாபாரிகள் | (அ) 3 |
| 16. (இ) மொத்த வியாபாரிக்கும் சில்லரை வியாபாரிக்கும் இடையேயான வியாபாரம் W2R | (ஆ) ராபர்ட் ஓவென் |
| 17. (ஈ) பண்டகசாலை | (இ) தனியாள் வணிகம் |
| 18. (ஈ)தனியார் பண்டகசாலை | (ஈ) உரிமையாளர்கள் |
| 19. (அ) Goods and Service Tax | (ஈ) பண்டகசாலை |
| 20. (ஆ) ஒப்பந்தத்தால் | (இ) சம்பளம் / கூலி |

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X2=14**

**21. பண்டமாற்று முறை:** ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்யப்படும் முறையேப் பண்டமாற்று முறை எனலாம்

**22. கூட்டாளி:** பல நபர்கள் ஒன்று சேர்ந்து, கூட்டாண்மையை ஏற்படுத்தினால் அவர்கள் கூட்டாளிகள் என்றும், கூட்டாக நிறுவனம் என்று அழைக்கப்படுகிறது.

**23.துறைவாரி அமைப்புகளுக்கு 2 உ.ம்:** அஞ்சல் பாதுகாப்பு இரயில்வே

**24. ATM** தானியங்கி பணம் வழங்கும் அட்டையைப் பயன்படுத்தி இந்தியாவில் எங்கிருந்தும் எந்தவொரு நேரத்திலும் பணத்தை எடுக்க முடியும். இயந்திரம் வாடிக்கையாளர்களின் கணக்கில் இருக்கும் மீதி இருப்பு தொகையையும் காட்டுகின்றன.

**25. பண்டகக் காப்பகத்தின் பணிகள்** பொருட்களை பாதுகாத்தல், விலைகளை நிலைப்படுத்துதல், தேவை மற்றும் வழங்கலையும் சமன்படுத்துதல

**26. அஞ்சலகச் சேமிப்பு திட்டங்கள்**

1.அஞ்சலக சேமிப்பு கணக்கு 2.அஞ்சலக தொடர்பு வைப்பு கணக்கு 3.அஞ்சலக நிலை வைப்பு கணக்கு 4.அஞ்சலக மாதாந்திர வருவாய் கணக்கு திட்டம் 5.முத்த குடிமக்கள் சேமிப்பு திட்டம் 6.பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு 7.தேசிய சேமிப்பு பத்திரங்கள் 8.கிசான் விகாஸ் பத்திரங்கள் 9.சுகன்யா சம்ரித்தி கணக்கு

**27. மறு ஏற்றுமதி வியாபாரம்:-** ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்.

**28. வியாபாரம்:** பொருட்களை உற்பத்தி கூடத்திலிருந்து நுகர்வோருக்கு கொண்டு சேர்க்கும் வரை நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் வியாபாரம் எனப்படுகிறது.

**29. மறைமுக வரி** வரிக்குரியவர் வரிச்சுமையினை மற்றொருவர் மீது மாற்ற இயலுமானால் அதுவே மறைமுக வரி என அழைக்கப்படுகிறது.

சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு விற்பனையாளரால் அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது.

எ.கா: சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி

**30. தனியாள் வணிகம்**

தனியாள் வணிகம் என்பது ஒரு நபர் தனது சொந்த பொறுப்பில் மூலதனத்தை ஏற்படுத்தி நிறுவனத்தின் இடர்பாடுகளையும் ஏற்றுக் கொண்டு வியாபாரத்தை மேலாண்மை செய்வதாகும

**ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளி 7X3=21**

**31. சேவைத் தொழில்கள்:** இயல் பொருட்களை உற்பத்தி செய்யாமல், சேவைப் பொருட்களை இலாபத்திற்கு விற்பனை செய்பவை, சேவைத் தொழில்கள் எனப்படுகின்றன. **வகைகள்:** பொதுச் சேவை, தனிச் சேவை

**32. அயல் நாட்டு நிறுமம்:** இந்தியாவிற்கு வெளியே வேறு நாடுகளில் பதிவு செய்யப்பட்டு, இந்தியாவில் தொழிலிடம் உள்ள நிறுமம் அயல் நாட்டு நிறுமம் எனப்படும். இந்தியாவின் சட்டங்கள் அவற்றிற்கு பொருந்தும் என்பதால், கீழ்க்கண்ட ஆவணங்களைக் கண்டிப்பாக நிறுமப் பதிவாளர்களிடம் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய வேண்டும்.

**அவையாவன:-**

சாசனத்தின் சான்றிதழ் நகல் அல்லது கூட்டுருவாக்கத்தின் சான்றிதழ் அல்லது அமைப்பு முறையேடு மற்றும் சங்க நடைமுறை வழிகள் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

நிறுமத்தின் பதிவு அலுவலகம் உள்ள இடம்.

இயக்குநர் மற்றும் செயலரின் பட்டியல்

இந்தியாவின் தலைமை வியாபார அலுவலகத்தின் முகவரி.

நிறுமத்தின் செயல்பாடுகளுக்கு ஒப்புதல் வழங்கிய இந்திய குடிமகனின் பெயர் மற்றும் முகவரி.

**33. பொது கழகம்** என்பது பாராளுமன்றமோ சட்டமன்றமோ இயற்றும் தனிச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டு தன்னாட்சி உரிமை பெற்ற நிறுவனம் ஆகும். பொதுக்கழகம் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத் தனித்தியங்கும் தன்மை உடன் சட்டத்தால் உருவாக்கப்படுவதாகவும் பொதுக் கழகத்திற்கான நோக்கங்கள் அதிகாரமங்கள் மற்றும் பணிகள் சட்டத்தால் வரையறுக்கப்பட்டுள்ளன

**34. சுய உதவி குழுக்களின் ஏதேனும் மூன்று சிறப்பம்சங்களை விளக்குக.**

"முதலில் சேமிப்பு" பிறகு "கடன்" என்பது ஒவ்வொரு குழு உறுப்பினரின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

சுய உதவிக் குழு ஒரே மாதிரியான பொருளாதார நிலையில் உள்ளவர்களை, உறுப்பினர்களாகக் கொண்டு அமைக்கப்படுகிறது.
சுய உதவிக்குழு என்பது 10 முதல் 20 உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படுகிறது.
குழுக்களைப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.
அரசியல் சார்பு இல்லாத, தாமாகவே சேர்ந்து உருவாக்கிய ஜனநாயகக் கலாச்சாரத்தைக் கொண்டது இந்தக் குழுக்கள்.
ஒவ்வொரு குழுவிலும், ஒரு குடும்பத்திலிருந்து ஒரு நபர் மட்டுமே உறுப்பினராக இருக்க முடியும்.
ஆண்கள் மட்டுமோ, அல்லது பெண்கள் மட்டுமோ உறுப்பினர்களாக இருக்கும் வகையில் குழு அமைக்கப்பட வேண்டும்.
சுய உதவிக்குழு கூட்டமானது, ஓய்வு நேரங்களில் மட்டும் வாரம் ஒரு முறை கூட்டப்பட வேண்டும், அதிகப் பங்களிப்பிற்கு அனைவரும் வருகை தருதல் வேண்டும் என்பது கட்டாயமாகும்.

**35. மொத்த வியாபாரிகளின் பண்பு நலன்கள் ஏதேனும் மூன்றினை எழுதுக.**

மொத்த வியாபாரிகள் உற்பத்தியாளர் அல்லது தயாரிப்பாளரிடமிருந்து நேரடியாகப் பொருட்களை வாங்குகின்றனர்.
இவர்கள் பொருட்களை மொத்தமாக வாங்கி, சிறிய அளவில் விற்பனை செய்கின்றனர்.
ஒரு குறிப்பிட்ட பொருளின் பல்வேறு வகைகளை விற்பனை செய்கின்றனர்.
பொருட்களை விநியோகம் செய்ய, முகவர்களையும் பணியாளர்களையும் அமர்த்தியுள்ளனர்.
இவ்வகை வியாபாரத்திற்குப் பெருமளவு முதலீடு தேவைப்படுகிறது.
சில்லறை வியாபாரிகளுக்கு இவர்கள் கடனுதவி அளிக்கின்றனர்.
உற்பத்தியாளர்களுக்கும் இவர்கள் நிதியுதவி செய்து தருகின்றனர்.
நகரங்கள், பெருநகரங்களில் உள்ள சந்தைகளின் ஒரு பகுதியில் இவர்கள் செயல்படுவதைக் காணலாம்.

**36. மடங்கு கடையின் குறைபாடுகள்**

**1.ஒரு சில பொருட்கள் மட்டும் விற்பனை** மடங்கு கடையில் குறிப்பிட்ட சில வகை பொருட்கள் மட்டும் விற்பனை செய்வதால் வாடிக்கையாளர்கள் அவற்றை மட்டுமே வாங்க முடியும்.

**2. வசதிகள் இல்லாமை** இக்கடைகளில் வாடிக்கையாளர் எதிர்பார்க்கும் கடன் விற்பனை வீட்டு விநியோகம் ஓய்வறை விளையாடும் இடங்கள் போன்ற வசதிகள் கிடைப்பதில்லை.

**3. நேரடித் தொடர்பின்மை** உரிமையாளர் வாடிக்கையாளர்களிடம் நேரடித் தொடர்பு கொள்ள வாய்ப்பில்லை. ஊழியர்கள் ஒவ்வொரு வாடிக்கையாளரிடமும் ஊக்கத்துடன் பணியாற்ற வாய்ப்பு இல்லை.

**37. ஒப்பந்தத்தை மீறு கையினால் பாதிக்கப்பட்ட நபருக்கு பின்வரும் தீர்வுகள்** 1.ஒப்பந்தத்தை ரத்து செய்தல். 2.திட்டவட்டமான நிறைவேற்றத்திற்கான வழக்கு. 3.தடையுத்தரவிற்கான வழக்கு. 4. பணிக்கு ஏற்ற தொகைக்கான வழக்கு 5.ஏற்பட்ட நட்டத்திற்கான இழப்பீடு.

**38. ஐவகை வருமான தலைப்புகளை வரிசைப்படுத்துக.**

சம்பளங்களிலிருந்து வருமானம் (பிரிவு 15 – 17)
வீட்டுச் சொத்திலிருந்து வருமானம் (பிரிவு அத்தியாயம் 25-27)
வாணிபம் மற்றும் அலுவல் சார்ந்த தொழிலில் இலாபங்கள் மற்றும் ஆதாயங்கள் (பிரிவு 28-44)
மூலதன ஆதாயங்கள் (பிரிவு 45-55)
ஏனைய ஆதாரங்களிலிருந்து வருமானம்(பிரிவு 56-59)

**39. சிறப்புத் தொழில்:-** அந்தந்த துறையால், அதற்கென நிர்ணயம் செய்யப்பட்ட, உயர்கல்வித் தகுதி மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழங்கப்படும் சிறப்பான பணிகள் சிறப்புத் தொழில்கள் ஆகும்.
**எகா:-** வழக்கறிஞர்கள், பட்டயக் கணக்காளர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள் வழங்கும் பணிகள்.
சிறப்புத் தொழில் மேற்கொள்பவர்களை சிறப்புத் தொழிலாளர்கள் எனவும் அவர்கள் பெரும் வருவாய் சிறப்புத் தொழில் கட்டணம் எனவும் அழைக்கப்படும்.

**40. காப்பீட்டின் கோட்பாடுகள்** மிக்க நம்பிக்கை, காப்பீடு பெறுநலன், ஈட்டுறுதி, அண்மைக் காரணம், பகிர்ந்தளித்தல், பகர உரிமை

**மிக்க நம்பிக்கை:-**
இக்கோட்பாட்டின் படி காப்பீடு தருநர் மற்றும் காப்பீடு பெறுநர் மிக்க நம்பிக்கை அடிப்படையில் ஒப்பந்தத்தில் ஈடுபடுகின்றனர்.
காப்பீடு பெறுநர், கருப்பொருள் பற்றிய அனைத்து உண்மைகளையும் காப்பீடு தருநருக்கும், காப்பீடு தருநர், காப்பீட்டு ஒப்பந்தம் குறித்த அனைத்து தகவல்களையும் காப்பீடு பெறுநருக்கும் தெரிவித்து விட வேண்டும்.

**அனைத்து கேள்விகளுக்கும் விடையளி: 7X5=35**

| 41.அ. தொழில் | சிறப்புத் தொழில் | வேலைவாய்ப்பு |
|---|---|---|
| **உருவாக்கும் முறை:-** தோற்றுவிப்பாளர்களின் முடிவுகள், பதிவு மற்றும் பிற நடைமுறைகள் அனைத்தும் சட்டத்திற்கு உட்பட்டது. | சிறப்புத் தொழிலமைப்பை உருவாக்குதல், உறுப்பினர் சான்று பெறுதல் | சேவைக்கான ஒப்பந்தம் அமைப்பது, நியமன கடிதம். |
| **பணியின் தன்மை:-** சரக்கு மற்றும் சேவையை பொது மக்களுக்கு அளித்தல் | சிறப்புத் தேர்ச்சி பெற்ற சேவையை வழங்குதல் | பணியாளர்களுக்கு வழங்கிய செயலை செய்தல். |
| **தகுதி:-** குறைந்தபட்ச தகுதி என்று ஏதும் இல்லை. | குறிப்பிட்ட பிரிவில் சிறப்புத் தகுதியும், பயிற்சியும் பெறுதல். | குறைந்த பட்ச தகுதி தேவை இல்லை. |
| **அடிப்படை நோக்கம்:-** சமுதாயத்தின் தேவையை பூர்த்தி செய்து, இலாபம் ஈட்டுவது. | சேவை புரிதல் | முதலாளிகளுக்கு செயலை செய்து முடிப்பதுடன், கூலி, சம்பளம் பெறுதல். |
| **வெகுமதி:-** இலாபம் | தொழில் முறை கட்டணம் | கூலி, சம்பளம். |



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

| | | |
|---|---|---|
| **இடர்:-** இலாபம், நிச்சயமான மற்றும் நிச்சயமற்றதாகும். | கட்டணம் நிச்சயமானது மற்றும நிலையானது. | நிலையான கூலி / சம்பளம் இடர் ஏதும் இல்லை. |
| **உரிமை மாற்றம்:-** சில நடைமுறைகளைப் பின்பற்றி உரிமை மாற்றம் செய்யப்படும். | உரிமை மாற்றம் செய்ய இயலாது. | உரிமை மாற்றம் செய்ய முடியாது. |

**41.ஆ. ஏதேனும் ஐந்து தனிநபர் முதலீட்டு வழிகள்**

**பொது வருங்கால வைப்பு நிதி:-**
இந்தியாவில் உள்ள மிகச்சிறந்த முதலீட்டு வாய்ப்புகளில் இது மிகப் பாதுகாப்பான நீண்ட கால முதலீட்டு வாய்ப்பாகும்.
இதற்கு முழுமையான வருமானவரி விலக்கு உண்டு.
இந்த வருங்கால வைப்பு நிதி கணக்கை வங்கி அல்லது அஞ்சலகத்தில் ஆரம்பிக்கலாம்.
இதில் செலுத்தப்பட்ட தொகை 15 ஆண்டுகளுக்கு முன்பாகத் திரும்பப் பெற முடியாது.
முதிர்வு தேதிக்கு முன்பாக முதலீட்டாளருக்கு நிதி நெருக்கடி அல்லது நிதித் தேவை ஏற்பட்டால் இந்தக் கணக்கிலிருந்து கடன் பெற்று நிதி நெருக்கடியை சமாளித்துக் கொள்ள வாய்ப்பு உள்ளது.

**பரஸ்பர நிதிகள்:-** பரஸ்பர நிதி என்பது, நிதி நிறுமங்கள் பொது மக்களிடமிருந்து பல்வேறு பரஸ்பர நிதித் திட்டங்கள் மூலமாக திரட்டிய பணத்தை பங்குச் சந்தையில் முதலீடு செய்து, அவை ஈட்டும் இலாபத்தை முதலீட்டாளர்களுக்கு பகிர்ந்தளிக்கும் ஏற்பாடு ஆகும்.
இதன் மூலம் சாதாரண மக்கள் மறைமுகமாக பங்குச் சந்தையில் பங்கு பெறும் வாய்ப்பை பெறுகின்றனர்.
பரஸ்பர நிதி நிறுவனங்கள் சிறு முதலீட்டாளர்கள் தேவைக்கு ஏற்ப, பலதரப்பட்ட திட்டங்களை வைத்துள்ளன.
இலாப நோக்கம் உடைய திட்டம், உடனடியாக பணமாக்கும் திட்டம், பாதுகாப்பான திட்டம் மற்றும் இந்த மூன்றையும் உள்ளடக்கிய சமச்சீர் திட்டம் போன்ற பல திட்டங்கள் நடைமுறையில் உள்ளன.
முதலீட்டாளர்கள் அவர்களின் தேவைகளுக்கு ஏற்ப, சரியான முதலீட்டு திட்டத்தினை தேர்ந்தெடுத்து கொள்ளலாம்.

**பொது வைப்புகள்:-** வங்கிகளில் நிலை வைப்பு நிதியில் பணம் செலுத்துவதைவிட பொது வைப்புகள் அதிக இலாபகரமானவை.
இதில் முதலீட்டாளர் முதலீட்டு கால அளவை மிக்க கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.
முதலீட்டாளர் அந்த முதலீட்டு தொகையை, முதிர்வு காலத்திற்கு முன்பாக திரும்ப எடுக்க முடியாது.
பொது வைப்பு வசூலிக்கும் நிறுவனங்கள், அந்த வைப்புத் தொகைக்கு எந்தவிதக் காப்பீட்டு வசதியையும் அளிப்பதில்லை.
இது, ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் வருவதும் அல்ல.
நீண்ட காலத்திற்கு முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர்கள் பொது வைப்பினைத் தேர்ந்தெடுக்கலாம்.

**காப்பீட்டு திட்டங்களுடன் இணைந்த பரஸ்பர நிதி:-**
ULI என்பது, ஆயுள் காப்பீடு இணைந்த ஒரு பரஸ்பர நிதி முதலீடு ஆகும். இது காப்பீடு செய்பவருக்கு இழப்பை ஈடு செய்வதோடு பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில் பரஸ்பர நிதி இணைந்த திட்டம் மூலமாக முதலீடு செய்யும் வாய்ப்பை அளிக்கிறது.

**42.அ. தனியாள் வணிகத்தின் சிறப்பியல்புகள்:**

**தனிநபர் உரிமை:-** இது தனிநபரால் நடத்தக் கூடிய அமைப்பாகும். அவர் ஒருவரே தேவையான மூலதனத்தைச் செலுத்துகிறார். வணிக நிறுவனத்தின் உரிமையிலும், அதனை நிர்வகிப்பதிலும் மையமாகச் செயல்படுகிறார்.

**தலையீடு அற்ற செயல்பாடு மற்றும் விரைவான முடிவு:-** தனது அறிவுத் திறன் மற்றும் பட்டறிவு மூலம் யாருடைய குறுக்கீடின்றிச் செயல்படுகிறார். இதன் மூலம் உடனடியாகவும் விரைவாகவும் முடிவெடுக்கிறார்.

**வரையறாப் பொறுப்பு:-** தனியாள் வணிகரின் பொறுப்பு வரையறுக்கப்படாதது. அதன் விளைவாக, அவரது வியாபாரக் கடன்களைச் செலுத்தத் தொழிலின் சொத்துகள் போதுமானதாக இல்லையென்றால் தன் சொந்த சொத்துகளிலிருந்தும் கடனீந்தோருக்குச் செலுத்த வேண்டும்.

**முழு இலாபத்தையும் அனுபவிக்கும் உரிமை:-** நிறுவனத்தின் முழு இலாபத்தையும் அனுபவிப்பதால் அவரை மேலும் அதிக இலாபம் ஈட்ட ஊக்கப்படுத்துகிறது.

**அரசு விதிமுறைகள் பின்பற்றாமை:-** இவ்வமைப்பை உருவாக்குவதிலோ, மேலாண்மை செய்வதிலோ அல்லது கலைப்பதிலோ அரசின் விதி முறைகளை பின்பற்றப்பட வேண்டிய கட்டாயம் இல்லை.

**குறைந்த மூலதனம் மற்றும் வரையறைக்குட்பட்ட மேலாண்மைத் திறமை:-** தனி ஒருவரே மூலதனம் வழங்குவதால் முதல் சிறிய அளிவிலேயே இருக்கும் அதனால் நிதித் தடை ஏற்படுவதற்கு வாய்ப்பு அதிகம். மேலாண்மைத் திறமைக் குறைவாக இருக்கும் சூழ்நிலையில், நிறுவன விரிவாக்கம் பெரிதும் பாதிக்கப்படலாம்.

**42.ஆ. சட்டப்படி செல்லக் கூடிய ஒப்பந்தம் ஒன்றின் இன்றியமையாத கூறுகள் யாவை?**

**முனைவும் ஏற்பும்:-** ஒரு ஒப்பந்தத்திற்கு இரண்டு நபர்கள் தேவை. அவர்களில் ஒரு நபர் முனைவும் மற்றொருவர் ஏற்பும் செய்கின்றனர்.

**சட்ட உறவு முறை:-** ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களின் உள்நோக்கம், தங்களுக்கிடையே ஓர் சட்ட உறவு முறை உருவாக்குவதற்காக இருக்க வேண்டும்.

**சட்ட பூர்வமான மறுபயன்:-** மறுபயன் என்பது, எதையேனும் திரும்பப் பெறுதல் ஆகும். மறுபயன் இல்லாத உடன்படிக்கை செல்லாத உடன்படிக்கையாகும்.

**சட்டபூர்வமான நோக்கம்:-** உடன்படிக்கை நோக்கம் சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். இதன் நோக்கம், சட்டத்துக்கு புறம்பானதாகவோ அல்லது



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

ஒழுக்கக் கேடானதாகவோ அல்லது பொது நலனுக்கு எதிராகவோ இருக்கக் கூடாது.

**தன்னிச்சையான இசைவு:-** உடன்படிக்கை நபர்களின் தன்னிச்சையான இசைவால் ஏற்பட்டிருந்தல் வேண்டும். ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர்களிடம் மனமொத்த இசைவு தர வேண்டும். அவர்கள் ஒரு விஷயத்தை ஒரே நேரத்தில் ஒரே நோக்குடன் உடன்பட வேண்டும். அதாவது, ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.

**ஒப்பந்த தகுதி** ஒப்பந்தத்தில் ஈடுபடத் தேவையான தகுதி உடைய நபர்களால், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை மட்டுமே ஒப்பந்தம் ஆகிறது.

**சட்டத்தால் செயல்படுத்தும் திறன்:-** சட்டத்தால் செயல்படுத்தும் திறன் கொண்டதாக இருத்தல் வேண்டும். சட்டத்தால் சில உடன்படிக்கை சட்ட விரோதமானது அல்லது செல்லாது என வெளிப்படையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**43.அ. துறைவாரி நிறுவனங்களின் 3 நன்மைகள்**

**எளிமையான அமைப்பு:-** இதனை அமைப்பது எளிது, இவ்வமைப்புகளை நிர்வாக முடிவு எடுத்து அரசு அமைப்பது எளிய முறையாகும்.

**பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் நேரடிக் கட்டுப்பாடு:-**இதனை, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றத்தின் மூலம் மட்டுமே நேரடியாக கட்டுப்படுத்தப்படும். அத்துறை அமைச்சரே இதற்கு பொறுப்பாவார்.

**இரகசியம் காத்தல்:-**பாதுகாப்பு மற்றும் அணுசக்தி துறைகள் போன்றவைகள் அரசுத்துறைகளின் கட்டுப்பாட்டில் தான் இருக்க வேண்டும். அப்போது தான் அத்துறைகளில் பணியாளர்கள் தங்களது பணிகள், கொள்கைகள் மற்றும் செயல்பாட்டினைப் பற்றிய இரகசியங்களைப் பாதுகாத்து வைக்க முடியும்.

**பொது மக்களுக்கு வரிச்சுமை குறைவு:-** இத்தொழில் நிறுவனங்கள், தங்களது வருமானத்தை அரசுக் கருவூலங்கள் மூலம் செலுத்தப்படுவதால் பொது மக்களுக்கு குறைந்த வரியே விதிக்கப்படும்.

**சமூக மாற்றத்திற்கான கருவி:-**அரசாங்கம் பொருளாதார மற்றும் சமூக நீதியை அரசுத் துறை நிறுவனங்கள் மூலமே சிறப்பாக செயல்படுத்த முடியும். ஆகவே, அரசாங்கம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த துறை நிறுவனங்களை கருவியாக பயன்படுத்துகின்றன.

**தீமைகள்:- (3)**

**தாமதமும் சிகப்பு நாடா போக்கும்:-**அரசின் நெகிழ்வுற்ற நடைமுறைகளையும் மரபுகளையும் பின்பற்றுவதும், காலதாமதமும் இதனுடைய மிகப் பெரிய குறைபாடாகும். வணிக நிறுவனங்கள், காலதாமதமாக முடிவு எடுப்பது ஏற்புடையது அல்ல.

**கூடுதல் வரிச்சுமை:-**துறைவாரி நிறுவனங்களில் ஏற்படும் நட்டத்தை, ஈடுகட்ட அரசின் கருவூலத்திலிருந்து தொகையை வழங்க வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்கள் மீது மேலும் வரியை சுமத்தி வரிச்சுமை கூட்டுகிறது.

**போட்டியின்மை:-**இதில் பணியாற்றும் அரசு அலுவலர்கள், வணிக அனுபவமோ அல்லது வியாபார வெளிப் பார்வையோ இல்லாததால், நுகர்வோரின் விருப்பத்தையும் அல்லது தேவையையும் அறிந்து கொள்ளாமல், தங்களது குறுகிய அனுபவத்தின் மூலம் வழிநடத்தி, இந்நிறுமங்களின் செயல் திறனை குறைக்கின்றனர்.

**பணியில் சராசரி அணுகுமுறை:-**அரசு அலுவலர்கள், தங்களது பணியில் சராசரி அணுகுமுறை போன்றே, இந்நிறுவன பணியிலும் ஈடுபடுகிறார்கள். அதனால் நிறுவனத்தைக் கட்டுப்படுத்துக்கிற திறமை இல்லாமல் போகிறது.

**அரசின் தலையீடு:-**இந்நிறுவனங்களின் மீது, அளவுக்கதிகமான கட்டுப்பாடு மற்றும் விதிகளை அரசு சுமத்துகிறது. மேலும், தன்னாட்சியுடன் பணியாற்ற விடுவதில்லை. இதனால் மந்தப் போக்கு ஏற்பட்டு, செயல் திறன் பாதிக்கப்படுகிறது.

| 43 ஆ.மொத்த வியாபாரி | சில்லை வியாபாரி |
|---|---|
| உற்பத்தியாளரிடமிருந்து பொருட்களை வாங்குபவர் | மொத்த வியாரிகளிடமிருந்து |
| நகரங்களின் மையமான இடங்களில் | நுகர்வோருக்கு அருகில் |
| உற்பத்தியாளரிடம் நேரடி தொடர்பு | நுகர்வோரிடம் நேரடி தொடர்பு |
| உற்பத்தியாளரிடம் வாங்கிய பொருட்களை பாதுகாப்பாக காப்பகங்களில் வைத்திருப்பர் | விற்பனைக்கு தயாராக காட்சிக்கு வைத்திருப்பர் |

**44.அ. செயல்முறை விதிகள்** என்பது நிறுவனத்தின் முக்கிய ஆவணமாகும். இதில் உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தெளிவாக குறிப்பிடப்பட்டு இருக்கும் இந்த முக்கிய ஆவணம் நிறுமத்தைப் பதிவு செய்யும் பொழுது நிறுமம் பதிவாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

**செயல்முறை விதிகளில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள்**

பங்குகள், பங்கு மூலதனம், பங்குகளின் மதிப்பு மற்றும் பங்குகளின் வகைகள்.

ஒவ்வொரு வகை பங்குநர்களின் உரிமைகள் அதாவது ஓட்டுரிமை, பங்காதாயம், பங்கு முதலை திரும்பப் பெறுதல் போன்றவை.

பங்குகள் மற்றும் கடனீட்டுப்பத்திரங்கள் வெளியீடு தொடர்பான விதிகள்.

பங்குகள் மீதான அழைப்புப் பணத்தை செலுத்த அழைப்பு விடுத்தல் தொடர்பான விதிமுறைகள்.

பங்கு மாற்றம் குறித்த விதிகள்.

பங்காதாயம் அறிவித்தல்.

நிறுமத்தின் கடன் வாங்கும் அதிகாரம்.

இயக்குநர்களின் நியமனம், ஊதியம் மற்றும் நீக்கம்.

கூட்டங்கள் நடத்துதல், பகராள், குறைவெண் போன்றவை தொடர்பான நடைமுறைகள்

நிறுமத்தின் கணக்கு வைப்பு மற்றும் தணிக்கை தொடர்பான நடைமுறைகள்.

நிறுமத்தின் பொது முத்திரை.

நிறுமக் கலைப்புத் தொடர்பான நடைமுறைகள்.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**44.ஆ. பன்னாட்டுவணிகத்தின் நன்மைகள் ஏதேனும் 5**

**நிலவியல் சிறப்புத் தேர்ச்சி:-** உலக நாடுகள் ஒவ்வொன்றும் மக்களின் வாழ்க்கைத் தேவைக்காக, தன்னிடம் உபரியாக உள்ள வளங்களை கொடுத்து, பற்றாக்குறையான வளங்களை மற்ற நாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு பன்னாட்டு வணிகம் தேவையாகிறது.

**இயற்கை வளங்களை முழுமையாக பயன்படுத்துதல்:-** ஒவ்வொரு நாடும், தன்னிடம் இயற்கையாகவே அமைந்துள்ள வளங்களைப் பயன்படுத்தி, அதிக பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத நாடுகளோடு பரிமாறிக்கொள்ள பன்னாட்டு வணிகம் உதவி செய்கிறது.

**பொருளாதார வளர்ச்சி:-** வளரும் நாடுகள் இயந்திரம், தொழில் நுட்பம், மற்றும் கருவிகள் போன்றவற்றை இறக்குமதி செய்வதன் வாயிலாக, விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு பன்னாட்டு வணிகம் உதவுகிறது.

**வேலைவாய்ப்பை உருவாக்குதல்:-** பன்னாட்டு வணிகம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நிறுவனங்கள் மூலம் நேரடி வேலைவாய்ப்பையும், மறைமுக வேலைவாய்ப்பையும் உருவாக்குகிறது.

**வாழ்க்கைத் தரம் மேம்படுதல்:-** பன்னாட்டு வணிகத்தின் வாயிலாக, உள் நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பல்வேறு விதமான பொருட்களை, வெளிநாட்டிலிருந்து வாங்கி பயன்படுத்த முடிகிறது, நாடுகளுக்கு இடையே, சரக்கு மற்றும் சேவை பரிமாற்றம் என்பது மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துகிறது.

**விலை சமனிலைப்படுத்துதல்:-** எப்பொழுதெல்லாம் குறிப்பிட்ட பொருட்களின் விலை, உள்நாட்டில் உயருகிறதோ அப்போழுது மற்ற நாட்டிலிருந்து அப்பொருட்களை இறக்குமதி செய்து விலையை சமன்செய்கிறது. அதே போன்று, குறிப்பிட்ட பொருட்களின் விலை குறையும் போதெல்லாம் அந்த பொருட்களை அதிக அளவில் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் விலையை நிலைப்படுத்துகிறது.

**அதிக இலாபத்திற்கான வாய்ப்பு:-** வியாபார நிறுவனங்களை அதிகமான பொருட்களை உற்பத்தி செய்து, அதிக விலைக்கு விற்பதன் வாயிலாக அதிக இலாபத்தை ஈட்ட உதவுகிறது.

**45.அ. வணிக வங்கியின் பல்வேறு வகையான கடன்கள்** வணிக வங்கிகளின் இரண்டாவது முக்கிய செயல்பாடு வட்டி வருமானம் பெறுவதற்காகக் கடன் கொடுப்பதாகும். வங்கிகள் குறிப்பிட்ட அளவு பணத்தை வட்டியுடன் திரும்பச் செலுத்தும் கடனாக வழங்குகின்றன.

அ. முன் பணம்:- 1. வங்கி மேல்வரைப் பற்று 2. ரொக்கக் கடன் 3. மாற்றுச்சீட்டுகளை தள்ளுபடி செய்தல்.

ஆ. கடன்கள்:- குறுகிய கால நடுத்தரக் காலக் கடன்களை வணிக வங்கிகள் தகுதி வாய்ந்த பிணையங்களைப் பெற்றுக் கொண்டு, தொழில் நிறுவனங்களுக்கு வழங்குகின்றது. ஒரு குறிப்பிட்ட மொத்தத் தொகையினை ஒரு குறிப்பிட்ட கால அளவுக் கடன் வழங்குவதை இது குறிக்கிறது.

1. வீட்டுக்கடன் 2. நுகர்வோர் கடன் 3. வாகனக் கடன் 4. கல்விக் கடன் 5. நகைக்கடன்

இரண்டாம்நிலைப் பணிகள்:- 1. முகமைப் பணிகள் 2. பொதுப்பயன்பாட்டுப் பணிகள்.

**45.ஆ. கூட்டாண்மை நிறுவனத்தைப் பதிவு செய்ய பின்பற்றப்படும் நடைமுறைகளை விவரி.**

நிறுவனத்தின் பெயர்

வணிகத்தின் தலைமையிடம்

பிற இடங்களில் அமைந்திருக்கும் தொழிலின் கிளை நிறுவனங்களின் முழு விவரம்

அனைத்து கூட்டாளிகளின் பெயர் மற்றும் முகவரி

ஒவ்வொரு கூட்டாளியும் கூட்டாண்மையில் சேர்ந்த நாள் மற்றும் முகவரி

கூட்டாண்மையின் காலம்

மேற்காணும் அறிக்கையை தயார் செய்து அனைத்துக் கூட்டாளிகளும் கையொப்பம் இட்டு, பதிவாளரிடம் பதிவுக் கட்டணம் ரூ.3 செலுத்தி, சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்காணும் அறிக்கையில் மாற்றம் செய்ய விரும்பினால் பதிவாளரிடம் 14 நாட்களுக்குள் தெரிவிக்க வேண்டும்.

**46.அ. உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள்**

ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல், விற்றல் நடவடிக்கைகள் இடம் பெறும்.

உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்.

உள்நாட்டு உற்பத்தியாளர் நுகர்வோர் மற்றும் இடைநிலையர்களுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது.

உள்நாட்டு வியாபாரம், இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது.

இதில் போக்குவரத்து இடர்பாடு, பன்னாட்டு வணிகத்தை விட குறைவாகவே உள்ளது.

உள்நாட்டில் நடைமுறையில் உள்ள சட்டங்கள் மட்டுமே பின்பற்றப்படும்.

இதன் நோக்கம், அத்தியாவசியப் பொருட்களை சிக்கனமாக வழங்குவது ஆகும்.

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் மட்டுமே இடம் பெறும்.

ஒரே நாட்டுக்குள் தோற்றுவிக்கப்பட்ட வியாபார அமைப்புகள் மற்றும் தனி நபர்களிடமிருந்து பொருட்களை வாங்கப்படுகிறது.

உள்நாட்டுப் போக்குவரத்து சாதனங்கள் மூலம் பொருட்கள் வினியோகம் செய்யப்படுகிறது.

இதில் சுங்கவரி, இறக்குமதி வரி போன்றவை இடம் பெறுவதில்லை.

**46.ஆ.பல்வேறு வகையான பண்டகக் காப்பகங்கள்(5)**

**உரிமையின் அடிப்படையில்:-** இவ்வகை பண்டகசாலைகள் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள், அவை உற்பத்தி செய்யும் பொருட்களைச் சேமிப்பதற்காக உருவாக்கப்படுபவை. இவை அவற்றின் சொந்த பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படுகின்றது.



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com

**அரசு பண்டக சாலைகள்:-** அரசின் திட்டங்களை அமுல்படுத்துவதற்காக, அரசு இந்த பண்டக சாலைகளை உருவாக்கி நடத்தி வருகிறது. இதன் சேவைகள் பெரும்பாலும் அரசு துறைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றன.

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது பெரிய அளவில் பொதுமக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சிறிய மற்றும் நடுத்தர வணிக நிறுவனங்கள், பெரிய அளவிலான பண்டகசாலைகளை சொந்தமாக அமைக்க முடியாது. அவர்கள் இம்மாதிரியான பண்டகசாலையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**கூட்டுறவு பண்டக சாலைகள்:-** இந்த பண்டக காப்பகத்தை ஏற்படுத்தி, நிர்வகிக்கும் பொறுப்பை கூட்டுறவு சங்கங்கள் அல்லது விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் மேற்கொள்கின்றன.

**பிணையகாப்பு பண்டகசாலைகள்:-** இவ்வகை பண்டகசாலைகள், அரசிடம் உரிமம் பெற்று இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை சுங்கவரி செலுத்தும் வரை பண்டக காப்பகத்தில் வைத்திருக்க பயன்படுகின்றன.

**நிறுவன முறை பண்டகசாலைகள்:-** ஒவ்வொரு நிறுவனமும் செய்யும் வேலையின் தன்மையைப் பொறுத்து அந்நிறுவனங்கள் பண்டக சாலைகளை வைத்திருக்கின்றன.

**விநியோக மையப் பண்டகசாலைகள்:-** தற்காலிகமாக சரக்குகளை ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வைப்பதற்கும் அங்கிருந்து சரக்குகளை பகிர்ந்தளிக்கவும், இவ்வகை பண்டக சாலைகள் பயன்படுகின்றன.

**பண்டங்களின் அடிப்படையில்:-**

**பொதுப் பண்டகசாலைகள்:-** இது உலர்ந்த தானியங்கள், உரங்கள், முதலியவற்றை பேரளவில் சேமித்து வைப்பதற்கான ஒரு பயனுள்ள பொதுப் பண்டக சாலை ஆகும்.

**சிறப்பு பொருள் பண்டகசாலைகள்:-**
புகையிலை, பருத்தி, கம்பளி போன்ற குறிப்பிட்ட வகை பொருட்களை பாதுகாப்பதற்காக இவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

**குளிர்பதன பண்டகசாலைகள் அல்லது குளிரூட்டப்பட்ட கிடங்குகள்:-**
பொருட்கள் குளிரூட்டப்பட்ட கொள்கலன்களில் கொண்டு செல்லப்படுகின்றன மற்றும் குளிரூட்டப்பட்ட பண்டக சாலைகளில் சேமிக்கப்படுகின்றன.
பழங்கள், காய்கறிகள், முட்டை, வெண்ணெய், மீன் மற்றும் இறைச்சி போன்ற விரைவில் அழுகக் கூடிய பொருட்களை சேமித்து வைப்பதற்காக இந்த பண்டகசாலைகள் பயன்படுத்தப்படுகின்றன.
சரியான நேரத்தில் குளிரூட்டப்பட்டு சேமிக்கப்படும் பொருட்கள், ஆண்டு முழுவதும் கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

**தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டு பண்டகசாலைகள்:-**
தட்பவெப்பநிலை கட்டுப்பாட்டில் உள்ள பண்டக காப்பகங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளின் வளர்சிதை மாற்றத்தை குறைக்க பயன்படுகின்றன.

**தானியங்கி பண்டக சாலை:-**ஒரே நேரத்தில் பல நூறு கிலோ எடையுள்ள சரக்குகளை கையாளக்கூடிய திறன் கொண்ட வசதிகள் இங்கு உண்டு. இதற்கு பெரிய முதலீடு, நவீன தொழில் நுட்பம் மற்றும் பெரிய அளவு சுழற்சி உள்ள பொருட்கள், நிறுவனத்தில் இருக்க வேண்டும்.

| 47. அ. அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| **பொருள்** | நேர்முக வரி என்பது, நபரின் வருமானம் மற்றும் சொத்துக்கள் மீது விதிக்கப்பட்டு அரசிடம் நேரடியாக செலுத்தப்படுகிறது. | மறைமுக வரி என்பது சரக்குகள் மற்றும் சேவைகளை நுகரும் நபர்கள் மீது விதிக்கப்பட்டு விற்பனையாளரால் அரசிடம் மறைமுகமாக செலுத்தப்படுகிறது. |
| **இயல்பு** | வளர்வீத வரி | பிற்போக்கு வரி |
| **வரி நிலைப்பாடு மற்றும் வரி தாக்கம்** | மதிப்பீட்டிற்குரியவர் மீது சுமத்தப்படுகிறது. | நுகர்வோர் மீது சுமத்தப்பட்டு ஆனால் வியாபாரியால் செலுத்தப்படுகிறது. |
| **வகைகள்** | சொத்துவரி, வருமானவரி, நிறும வரி, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வரிகள் | மத்திய விற்பனை வரிகள், மதிப்புக் கூட்டு வரி, சேவை வரி உள்நாட்டு வரி, சுங்க வரி. |
| **ஏய்ப்பு** | வரி வாய்ப்புக்கான வாய்ப்புகள் உள்ளன. | வரி ஏய்ப்பு காண வாய்ப்பு குறைவு |
| **பண வீக்கம்** | இது பணவீக்கத்தை குறைக்க உதவுகிறது. | இது பணவீக்கத்தை ஊக்குவிக்கிறது. |
| **மாற்றுதல்** | மாற்ற முடியாது | மாற்ற முடியும். |
| **உதாரணங்கள்** | சொத்து வரி, வருமானவரி | சரக்கு மற்றும் சேவை வரி, உற்பத்தி வரி |

**47.ஆ. பண்டையத் தமிழ்நாட்டில் கடற்கரையோர வர்த்தகம் பற்றி விளக்குக.**

பூம்புகார் போன்ற பெரிய நகரத்தில் மருவூர்பாக்கம் (உள்நாட்டு நகரம்) மற்றும் பட்டினப்பாக்கம் (கடலோர நகரம்) ஆகியவை உணவுப் பொருள்கள் மற்றும் இதர பல்பொருள்கள் வியாபாரம் செய்யக்கூடிய இடங்களாகும்.
மேலும் அங்கு அங்காடிகளையும் பெரு வியாபாரிகளையும் கொண்டிருந்தன.
தொண்டி, கொற்கை, பூம்புகார் மற்றும் முசிறி ஆகியவை முக்கிய துறைமுகங்களாக இருந்தன.
வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பிடம் பெற்றிருந்தது.
முத்துக்கள், பவளங்கள் மீன் பிடிப்பதிலும், உப்பு உற்பத்தியிலும், கப்பல் கட்டுவதிலும் பாண்டியர் ஈடுபட்டிருந்தனர்.
உள்நாட்டு வியாபாரத்திற்கு சிறிய படகு, திமிலா, தோணி, அம்பு, ஓடம்புனை, கட்டுமரம் போன்றவற்றை பயன்படுத்தினர்.
வெளிநாட்டு வியாபாரத்திற்கு பேரளவு கலம், மரக்கலம், வங்கம், நாவாய் போன்றவற்றை பயன்படுத்தினர்.

**குறிப்பு:** அரசு வழங்கும் விடைக்குறிப்பினை ஒப்பிட்டு பார்த்து மைய மதிப்பீட்டு பணியை மேற்கொள்ளுமாறு ஆசிரியப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்
www.maduraicommerce.com



Kindly send me your answer keys to our email id - padasalai.net@gmail.com